1989 பிப்ரவரி 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாங்கள் கொடுத்த உரிமைப் பிரச்சினை ஆய்வில் உள்ளது. அது குறித்து நாளை தெரிவிக்கப் படும்.

திரு. எம். அப்துல் லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்போது சில கருத்துக்களை —Judicial Observations

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் எழுப்பிய உரிமைப் பிரச்சினைக்கு பேரவைத் தலைவர் விடை சொல்லிவிட்டார். எனவே இடையில் சொல்வதற்கு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) வேறு பிரச்சினையாக இருந்தால் சொல்லுங்கள்.

(இ) தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பெற்ற காவல்துறை உயர் அதிகாரி தெரிவித்த கருத்து.

திரு. எம். அப்துல் லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் உயர் அதிகாரியாக இருந்த ஒருவர், டி.ஐ.ஜி. யாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர் திரு. வித்தியாசாகர். அவரைத் தற்காலிகமாக வேலையிலிருந்து அரசு நீக்கி இருக்கிறது. அதை நான் சந்திக்கத் தயார் என்று அவர் விடை அளித்திருக்கிறார். எனவே இது தொடர்பாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்து நீங்கள் தனியே எடுப்புத் தீர்மானமோ, ஒத்திவைப்புத் தீர்மானமோ கொடுக்க வேண்டுமே தவிர நேரடியாக இப்போது கேட்பது முறையாகாது. பேரவை இதுபற்றி நீங்கள் குறிப்பிட விரும்பினால் உங்களுக்கு உரிய முறையில் அதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே அருள்கூர்ந்து அப்போது எழுப்ப வேண்டும். (குறுக்கீடு) இது தொடர்பாகத் தீர்மானம் கொடுப்பதற்கு உறுப்பினருக்கு முழு உரிமை இருக்கிறது. அதைப் பயன்படுத்தத் தவறிவிட்டார்களோ என்று நான் கருதுகிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள்—தொடர்ச்சி.

*திரு. ரவி அருணன்: பேரவைத் தலைவர் அவர்களே, அம்பா சமுத்திரத்தில் மதுரா கோட்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்குப் பணிக்கொடை ஊதியம் பாக்கியை வழங்காததால் அந்தத் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு . . .